# 2012 කාර්යසාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# Performance Report

ආහාර කොමසාරිස් දෙපාර්තමේන්තුව

உணவு ஆணையாளர் திணைக்களம்

Food Commissioner's Department

DIBSS

For Long-Life Rice

DIBSS

For Long-Life Rice

# செயலாற்றுகை அறிக்கை

# 2012

## உணவு ஆணையாளர் திணைக்களம்

இல.330,

யூனியன் பிளேஸ்,

கொழும்பு – 02.

தொலைபேசி:*011-2421211*

தொலைநகல்:*011-2434291*

# முகவுரை

ஆசியாவின் தானியக் களஞ்சியம் என இலங்கை அழைக்கப்பட்டதன் காரணமாக இந்த நாட்டின் பெரும்பாலன மக்கள் உணவுத் தேவையப்பற்றி சிந்திக்கவேயில்லை. அவர்களின் வாழ்வாதாரமானது பெரும்பாலும் விவசாயத்தில் ஈடுபடுவதிலேயே தங்கியிருப்பதுடன் அவர்களின் தோட்டங்கள் பயிற்செடிகளினாலும் பழ மரங்களினாலும் நிரம்பி வழிந்திருந்தது. காடானது பழ மரங்களினால் நெடிது வளர்ந்திருந்தது. காலநிலையும் சீரான வானிலையும் வாழ்வாதாரத்திற்கு ஏற்றவாறு அமைந்திருந்தது.

ஆனால்இன்றைய நிலையானதுமுற்றிலும் மாறுபட்டதாகும். சனத்தொகையானது சடுதியாக அதிகரித்த அதேவேளையில் சிறியளவிலான மக்கள் தொகுதியினரே விவிசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். வானிலை மாற்றங்களும்அடிக்கடி ஏற்பட்டு வருவதுடன் பெருமளவிலான பயிற்செய்கை நிலங்கள் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. நுகர்வுத் தேவையானது மிகவும் உயர்வாகவுள்ளது. கட்டுக்கடங்காத தேசத்தின் நுகர்வுத் தேவையினை மட்டுப்படுத்தப்பட்ட அறுவடைகளைக் கொண்டு நிறைவு செய்வது பெரும் சிரமமானதொன்றாகும்.வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக நாம் கேள்விப்பட்டுள்ளோம். உணவுப்பொருட்களை இறக்குமதி செய்வதென்பது அபிவருத்தியடைந்து நாடுகளைப் பொறுத்தவரையில் அவற்றின் பொருளாதாரத்தில் மிகப்பெரிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. அந்தவகையில், பெருமளவிலான பணம் உணவுப் பொருட்களின் இறக்குமதிக்காக செலவிடுவது மிகவும் வருத்தமளிக்கும் விடயமாகும்.

அரசாங்கமானது இந்நிலையினை நிவர்த்தி செய்யும் நோக்குடன் உணவுப் பாதுகாப்பிற்கு முன்னுரிமை வழங்கியுள்ளது. நுகர்வுக்கு மிஞ்சிய இருப்புக்களை சேமித்து வைப்பதன் மூலம் உணவுப் பொருட்களின் தட்டுப்பட்டினை தவிர்க்க முடியும். அவ்வாறான அறிவுறுத்தல்களினைத் தொடர்ந்து 100,000 மெ.தொ. அரிசி இருப்பினை பாதுகாப்பு இருப்பு மட்டமாக பேண வேண்டிய பொறுப்பு உணவுத் திணைக்களத்திற்கு உரித்தளிக்கப்பட்டுள்ளது. உணவு திணைக்களத்தின் பொறுப்பான பாதுகாப்பு இருப்பு மட்டத்தினை பேணுவது தொடர்பில் உரிய முறையில் செயற்படுவதற்கு அது எதிர்பார்க்கின்றது.

அரிசி வழங்கல் தொடர்பில் சந்தையில் காணப்படும் தளம்பல் நிலை மற்றும் பேரிடர் நிலை ஆகியவற்றினை எதிர் கொள்ளும் வகையில் பேணப்படும்அரிசி இருப்பினை மனித நுகர்வுக்கு ஏற்றவகையில் ஆகக்கூடுதலாக நான்கு மாதங்களுக்கு மட்டுமே பேணிப்பாதுகாக்க முடியும் என்பதால் நான்கு மாத காலப்பகுதியினுள் பாதுகாப்பு இருப்பினை சந்தைக்கு விடுவிப்பது என்பது இயலாத காரியமாகும்.உணவு திணைக்களமானது சாதாரண களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்ட அரிசி இருப்பினை மனித நுகர்வுக்கு வழங்கும் போது கடந்த காலங்களில் பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்திருந்தது.

ஆகையால், திணைக்களமானது கடந்தகாலங்களில் எதிர்நோக்கிய பிரச்சனைகளை மறுபடியும் எதிர்கொள்ளாமல் பாதுகாப்பு இருப்பினை பேணுகின்ற அதன் நோக்கத்தினை அடைவது தொடர்பில் பொருத்தமான முறைகளை இனங்காணும் நடவடிக்கையில் கூடிய கவனம் செலுத்தியுள்ளது. அதற்கிணங்க, திணைக்களமானது, விஞ்ஞான முறைகளைப் பின்பற்றி நீண்டகாலத்திற்கு பாதுகாப்பு இருப்பினை பேணுவது தொடர்பில் ஆய்வு

செய்யப்பட்டதன் விளைவாக வெயாங்கொடை பண்டகசாலையில் விஞ்ஞான முறையிலான முதலாவது களஞ்சிய மாதிரியினை நிருமாணிப்பதற்கான முயற்சிகள் கடந்த வருடம் மேற்கொண்டிருந்தது.

குறித்த களஞ்சியத்தில் அரிசியினைப் களஞ்சியப்படுத்தும் நடைமுறையானது ஏற்கனவெ ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் திணைக்களமானது அத்தகைய மேலுமொரு களஞ்சியத்தினை 2013 இல் தாபிப்பதற்கான பூர்வாங்க வேலைகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளதுடன் அதன் முயற்சிகள் அனைத்தும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மனித நுகர்வுக்கு உகந்த வகையில் உயர்ந்த தரத்தில் பாதுகாப்பு இருப்பினை பேணுவது தொடர்பில் ஐந்து வருட திட்டமொன்றினை இனங்கண்டுள்ளது.

அந்தவகையில் இன்னொரு முயற்சியாக திணைக்களமானது பெரிய வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கு போன்ற உள்நாட்டு விளைபொருட்களின் பாதுகாப்பு இருப்பு மட்டத்தினைப் பேணும் வகையில் மேலும் இரண்டு விஞ்ஞான முறையிலான களஞ்சியங்களை தாபிப்பதற்கு எதிர்பார்க்கின்றது. திணைக்களமானது பிறிமா வீடமைப்புத் தொகுதியிலுள்ள வீடுகளை வாடகைக்கு வழங்குவதன் மூலமாகவும் மேலதிகமாகவுள்ள களஞ்சியங்களையும் பண்டகசாலைகளையும் வாடகைக்கு வழங்குவதன் மூலமாகவும் அதன் வருமானத்தினை பெருக்கிக் கொள்வதுடன் அரச வருமானத்திற்கான அதன் பங்களிப்பினை அதிகரித்தும் வருகின்றது.திணைக்களமானது, முதல் வருடத்தினைப் போன்றே எதிர்வரும் காலங்களிலும் வாடகையினைப் பெறுவதன் மூலமாக அரச வருமானத்திற்கான அதன் பங்களிப்பினை அதிகரித்து வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றது.

எனவே, அரசாங்கம் மற்றும் தேசத்தின் கனவான உயர்தரமான பாதுகாப்பு இருப்பினைப் பேணுதல், மிகைகளை ஏற்றுமதி செய்தல் மற்றும் அரச வருமானத்திற்கு பங்களிப்பினை வழங்குதல் என்பனவே உணவு திணைக்களத்தின் பிரதான நோக்கமாகும்.



என்.நிமல்கா டயஸ்

உணவு ஆணையாளர்

2013 மார்ச் மாதம் 25 ஆம் திகதி

யூனியன் பிளேஸ்,

கொழும்பு

உணவு திணைக்களத்தில்.

# பொருளடக்கம்

1. உணவு திணைக்களத்தின் நோக்கும் செயற்பணியும்……………...07

2. உணவு திணைக்களத்தின் அறிமுகம்………………..…………..08 - 11

3. ஒழுங்கமைப்பு படிமுறை– உணவு திணைக்களம்……….................12

4. நிருவாக படிமுறையும் பதவியினரும்…………………………...…..13 - 16

5. கணக்காய்வும்வினைத்திறன் நடவடிக்கைகளும்…………………......17

6. நீதிமன்ற நடவடிக்கைகள்……………………………………….....18

7. திணைக்களத்திற்குச் சொந்தமான களஞ்சியங்களும் வீடுகளும்….19 – 28

8. கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான பொழிப்பு…………………....29 –31

9. ஆதனங்களும்சொத்துக்களும்………………………………………..32

10. வருமானங்களும் அறவீடுகளும்……………………………………..33

11. நிதி அறிக்கைகள்……………………………………………….….34 – 36

12. தொழிற்பாடுகளும் முன்னேற்றமும்……………………...……….37 - 41

# (01). எம்மைப் பற்றி........

## ■ நோக்கு

“தரமான ஆரோக்கியமான அத்தியாவசிய உணவுப் பொருட்களை தட்டுப்பாடின்றி வழங்குவதற்கு உத்தரவாதமளித்தல்”

## ■ செயற்பணி

“உணவுத் தானியங்களை சந்தையில் இலகுவாக கொள்வனவு செய்வதற்கு நுகர்வோருக்கு வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் நுகர்வோர் கொள்வனவு செய்யக் கூடிய விலையில் அவற்றினை வழங்குவதற்கு உத்தரவாதமளித்தல் மற்றும் உணவுத் திணைக்களத்தின் கீழ் தொழிற்படுகின்ற நிறுவனங்களின் வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்துதல் மற்றும் உத்தியோகத்தர்களுடன் நெருங்கிய தொடர்பினைப் பேணுதனூடாக திணைக்களத்தின் இலக்கினை அடைதல்”

# (02). உணவு ஆணையாளர் திணைக்களம்

## அறிமுகம் (1942-2012)

இரண்டாம் உலகப் போரின் போது இலங்கை உள்ளடங்கலான அனைத்து நாடுகளும் அவற்றின் உள்ளக மற்றும் வெளிநாட்டு விவகாரங்களில் பெரிதும் பாதிக்கப்பட்டிருநதன. இதன்காரணமாக இலங்கையின் வர்த்தக நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன.இதனால், நாட்டில் உணவு விநியோகத்தினை சமமாக மேற்கொள்வதில் பல்வேறு தடைகள் காணப்பட்டதுடன் இலங்கை மக்கள் தமக்கான உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கியிருந்தனர்.ஆட்சியாளர்கள் இந்த அழுத்தத்திலிருந்து மக்கள விடுவித்து உணவு வழங்கலுக்கான நிலையான தீர்வொன்றினை பெற்றுக் கொள்வது தொடர்பில் பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டனர்.

இதன்விளைவாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினை தாபிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் உணவுப் பொருட்களின் விலைகளைத் தீர்மானிப்பதன் மூலம் நியாயமான முறையில் சீரனை உணவு விநியோகத்திற்கான பொறுப்பினையும் ஏற்றுக் கொண்டது.அரசாங்க திணைக்களம் ஒன்றினால் வழங்கப்படும் சேவை போன்ற எதிர்பார்ப்புடன் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது அதன் கடமைகைள ஏறக்குறைய ஒரு வருட காலப்பகுதி மேற்கொண்டதுடன் உணவுப் பொருட்களை இறக்குமதி செயதல், களஞ்சியப்படுத்துதல் மற்றும் விலைகளை நிர்ணயித்தல் போன்றவற்றினை அரசாங்கத்தின் சார்பில் மேற்கொள்வதற்காக 1942 உணவு திணைக்களம் தாபிக்கப்பட்டது.

உணவு திணைக்களம் 1942 இல் தாபிக்கப்பட்டதுடன் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் தலைவராக இருந்தார். உணவு ஆணையாளர் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் கையாளப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதில் முறையாக ஈடுபட்டதுடன் நாடளாவிய ரீதியில் உணவு விநியோகத்தில் ஏற்பட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

உணவு திணைக்களத்திற்கு 1943 இல் எடுக்கப்பட்ட சலுகையாக அரிசி பங்கீட்டினை வழங்கும் அரசாங்கத்தின் தீர்மானத்தினை அமுல்படுத்தவதற்குத் தேவையான அரிசியினை வழங்குவதற்கும் அரிசி பங்கீட்டு அட்டைகளை வழங்குவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டது. ஒவ்வொரு இலங்கைப் பிரஜையும் இச்சிறப்புச் சலுகையினைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவர்களாக இருந்த்துடன் மக்களுக்கு அரிசியினை விநியோகிப்பதற்காக கூட்டுறவு சங்கங்கள் தாபிக்கப்பட்டன. ஆரம்பத்தில், அரசி பங்கீட்டு அட்டைகள் அரிசிக்காக மட்டுமே வழங்கப்பட்டதுடன் பின்னர் இந்நடைமுறையானது வேறு சில அத்தியவசியப் பொருட்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

இச்சலுகையானது 1943 இலிருந்து 1979 ஆம் ஆண்டு வரையில் ஒவ்வொரு அரசாங்கத்தினாலும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வந்ததுடன் உணவுத் திணைக்களத்தினால் பங்கீட்டு அட்டைகளை வழங்குதல் மற்றும் தேவையான அத்தியவசிய உணவுப் பொருட்களை வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.பங்கீட்டு அட்டை முறைமையின் கீழ் தேவையான உணவுப் பொருட்களை வழங்குதல், தேவையப்படும் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்து அவற்றினை திணைக்களத்தின் மாவட்ட பண்டகசாலைகளில் களஞ்சியப்படுத்தி விநியோகம் செய்யும் நடவடிக்கைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அதேவேளையில் உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்தவதற்குப் போதுமான களஞ்சியங்களைப் பேணுதல் மற்றும் பிராந்திய உணவு விநியோகத்திற்காக மாவட்ட மட்டத்தில் பண்டகசாலைகளையும் பேணி வந்துள்ளது.உணவு திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டுவரும் பண்டகசாலைகள் இரண்டாம் உலகப் போர் காலப்பகுதியில் யுத்த

நோக்கத்திற்காக நிருமாணிக்கப்பட்டிருப்பதால் அவை புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளதுடன் தற்போது அவை திணைக்கள களஞ்சியங்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பாரிய செயற்பாட்டினைக் கொண்டுள்ள உணவுத் திணைக்களமானது நாடெங்கும் பரந்துபட்ட பண்டகசாலை வலையமைப்பினைக் கொண்டுள்ளது. உணவு ஆணையாளர் ஒவ்வொரு மாகாணங்களிலும் தனது நிருவாக நடவடிக்கைகளை முறையாக மேற்கொவதற்குமாவட்ட செயலாளர்களுடன் நேரடியாக ஒன்றிணைந்து செயற்படுகின்றார். உணவு வழங்கலினை மேற்கொள்ளும் பாரிய பொறுப்பினை திறமையாக முன்னெடுத்து வருவதால் உணவு திணைக்களமானது "அ" தரத்தினைச் சேர்ந்த நாட்டின் மிகப்பெரிய திணைக்களமாக விளங்குகின்றது.

கட்டுக்கடங்காமல் அதிகரித்துவரும் சனத்தொகையினை காரணமாக வறிய மக்களுக்கு அவ்வாறே குறைந்த வருமானத்தினைப் பெறுவோருக்கும் இலவசமாக உணவுப் பொருட்களை வழங்குவது தேவையற்றது என அரசாங்கம் தீர்மானித்தது. இதனால் அரிசி பங்கீட்டு அட்டை முறைமையானது நீக்கப்பட்டு 1979 இல் வறுமை நிவாரண முத்திரை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் உணவு திணைக்களமானது அதன் வறுமை நிவாரண பங்கீட்டு முத்திரை வழங்கும் அதிகாரத்தினை வறுமை நிவாரண ஆணையாளருக்கு மாற்றிக் கொண்டது.உணவு ஆணையாளர் திணைக்களம் தனது செயற்பாடுகளானஉணவுப் பொருட்களை இறக்குமதி செய்தல் மற்றும் கூட்டுறவு சங்கங்களுக்கு பங்கீடு செய்தல் போன்றவற்றினை வறுமை நிவாரண முத்திரை முறைமையின் கீழ் தொடர்ந்தும் மேற்கொண்டு வந்தது.

பிறிமா தொழிற்சாலையானது 1979 இல் திருகோணமலை துறைமுகத்தில் தாபிக்கப்பட்டதுடன் கோதுமை தானியத்தினை இறக்குமதி செய்தல், பிறிமா தொழிற்காலையிலுள்ள மா அரைக்க்ம் ஆலையில் அவற்றினை மாவாக்க் கோதுமை மா இறக்குமதிக்கு பதிலாக நாடெங்கும் அவற்றினை விநியோகிக்கும் பாரிய பொறுப்புக்கான தனியுரிமையினைக் கொண்டிருந்தது.உணவு திணைக்களமானது 1986 ஆம் ஆண்டளவில் உணவு விநியோகம் மட்டுமல்லாமல் மண்ணெய் வழங்கல் மற்றும் முத்திரை முறைமையின் கீழ் அரிசி, மா, சீனி போன்ற உணவுப் பொருட்களையும் விநியோகித்ததுடன் அதற்கான பணம் வறுமை நிவாரண திணைக்களத்தினால் கொடுத்து தீர்க்கப்பட்டது. ஆகையால் உணவு திணைக்களமானது உணவுத் தேவையினை நிறைவு செய்வதற்கான உணவுப் பொருட்களை இறக்குமதி செய்து அவற்றினை நாடெங்கும் விநியோகிக்கும் பாரிய பணியினை அரசாங்கத்தின் சார்பில் மேற்கொண்டது.உணவு திணைக்களத்திற்கு உரித்தளிக்கட்டிருந்த அதிகாரமான சீனி மற்றும் அரிசியினை இறக்குமதி செய்யும் அதிகாரம் 1987 இலும் 1989 இலும் தனியார் துறைக்கு வழங்கப்பட்டதுடன் 1986 இன் பிற்பகுதியில் உணவுத் திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடான உணவு விநியோகத்திற்கான பிரதிநிதித்துவமானது வலுவிழந்து போனது. எவ்வாறாயினும், திணைக்களமானதுஅதன் கடமைகளில் ஒன்று விலகிப் போனாலும் அதன் நோக்கத்தினை புறக்கணிக்கவில்லை.

அதன்பின்னர், உணவு திணைக்களம் 1990 இல் பொரளை, எலியட் பிளேஸிலுள்ள சமயலறைத் தொகுதி மற்றும் பேக்கரியினை பொறுப்பேற்றுக் கொண்டதுடன் பேக்கரி உற்பத்திகள், மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மாவினைப் பயன்படுத்தி உள்பத்தி செய்யப்படும் பாண் வகைகனை மேம்படுத்துவதன் மூலம் அதன் தொழிற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் சமைத்த உணவுகளை கொழும்பிலும் அரசாங்க நிறுவனங்களிலும் விநியோகித்தல்.

அதேவேளையில், அரிசி மா விநியோக செயற்பாடானது 2000 ஆம் ஆண்டு வரையில் எவ்வித தடங்கலுமின்றி வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. உணவு திணைக்களமானது 1981 ஆம் ஆண்டிலிருந்து இரண்டு தசாப்த காலமாக வகித்து வந்த மா விநியோகத்திற்கான தனியுரிமையினை இழந்தது. இத்தகைய சூழ்நிலையின் போது தனது நோக்கத்தினை கைவிடவில்லை. அரசாங்கத்தினதால் உரித்தளிக்கப்படும் ஏதேனும் பணியினை பொறுப்பேற்கும் எதிர்பார்ப்புடன் அது தொடர்பான கணக்குகளை மூடும் நடவடிக்கையில் ஈடுபட்டது.அரசாங்கத்தின் தீர்மானத்திற்கிணங்க, பொரளை எலியட் பிளேசிலுள்ள சமயலறை மற்றும் பேக்கரி பிரிவினை மூடுவதற்கும் அதன்

சொத்துக்களை பேர்க் நிறுவனத்திற்கு மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டதால் திணைக்களம் அதன் நோக்கல்லையின் பகுதியொன்றினை புறக்கணிக்க வேண்டியிருந்தது

திணைக்களமானது 1943 இலிருந்து 2002 வரையில் அதன் நோக்கத்தினையும் நோக்கெல்லைகளையும் பல்வகைப்படுத்தும் நோக்கில் செயற்பட்ட போதிலும், அப்போதிருந்த சூழ்நிலைகளுக்கமைய, வெற்றியை நோக்கி பயணிக்க முடிந்திருந்தது. திணைக்களமானது இத்தகைய சூழ்நிலையினை சமாளிக்க வேண்டியிருந்த போதிலும் அதன் பிரதான நோக்கான உணவுப்பாதுகாப்பினை உறுதி செய்தது. அந்த நோக்கத்தினை புறக்கணிப்பதை தடுப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில் சுங்கப் பண்டகசாலை உரிமையாளர்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அரசாங்கமானது, 2004 இல் உணவு விநியோகத்திற்கான முற்பணக்கணக்கினை கலைப்புச் செய்வதற்கான அறிவுறுத்தல்களை வழங்கியதினைத் தொடர்ந்து திணைக்களம் அதனைக் கலைப்புச் செய்தது. உணவு விநியோக நிகழ்ச்த்திட்டத்தினை தொடர்ந்து முன்னெடுப்பதில்லை என்ற அரசாங்கத்தின் தீர்மானத்திற்கிணங்க, உணவுத் திணைக்களத்தின் கடமைகள் குறைவடைந்ததுடன் அமைச்சின் செயலாளர் பதில் உணவு ஆணையாளராகவும் செயற்பட்டார்.

அரசாங்கமானது 2005 இல் உத்தரவாத விலையின் கீழ் அரிசியினைக் கொள்வனவு செய்வதற்கு ஆரம்பித்ததுடன் திணைக்களமானது அரிசியினைப் பதப்படுத்தி அவற்றினை பண்டகசாலைகளில் களஞ்சியப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டது. இதன்விளைவாக, மே 25 ஆம் திகதிய CP/06/0901/218/025 ஆம் இல.அமைச்சரவை தீர்மானத்தின்படி, கலைப்புச் செய்யப்பட வேண்டிய உணவு திணைக்களம் பாதுகாப்பு இருப்பு மட்டத்தினைப் பேணுகின்ற செயற்பாட்டில மட்டும் ஈடுபட்டது.

2008 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய TMCC/2008/18ஆம் இல. அமைச்சரவை பத்திரத்தின்படி, உணவு திணைக்களம் மறுசீரமைக்கப்பட வேண்டுமெனவும் அது CP/08/342/016ஆம். இல.அமைச்சரவை பத்திரம் மற்றும் 2008 செப்ரெம்பர் CP/0/1482/342/016 ஆம் இல. அமைச்சரவை பத்திரத்திற்கமைவாகவும் மேற்கொள்ளப்படல் வேண்டுமெனஆலோசனை வழங்கப்பட்டது.

புதிய பெண் உணவு ஆணையாளர் 2009 இன் நடுப்பகுதியில் நியமிக்கப்பட்டதுடன் அதனைத்தொடர்ந்து திணைக்களமானது அரசின் நோக்கங்களை அடைவதில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டது. அதற்கிணங்க, திணைக்களமானது, 146 பண்டகசாலைகளில் 126 பண்டகசாலைகளை வாடகைக்கு வழங்கியதன் மூலமாகவும் திருகோணமலை, தானியகமவிலுள்ள 366 வீடுகளை வாடகைகு வழங்கியதன் மூலமாகவும் அரசாங்க வருமானத்திற்கு பெரும் பங்களிப்பினை வழங்கியுள்ளது. மேலும், திணைக்களமானது 23 பண்டகசாலைகளில் 100,000 மெ.தொ. பாதுகாப்பு இருப்பினை பேணி வந்துள்ளது.

2010 இன் ஆரம்பத்தில் முன்னெடுக்கப்பட்ட மஹிந்த சிந்தனை அரசாங்க கொள்கைக்கிணங்க உள்நாட்டு விவசாய துறையினை தரமுயர்த்தும் நோக்குடன் விவசாயம் செய்யப்படாமல் ஒரு துண்டுக் காணியேனும் காணப்படக் கூடாது என்ற அடிப்படையில் விவசாயிகளை ஊக்குவிக்கப்பட்டதுடன் வளமாக்க் சலுகைகள் வழங்கியமை மற்றும் இறக்குமதி செய்ய்ப்பட்ட உள்ளக கட்டமைப்பு வசதிகளை வழங்கியமை போன்ற காரணங்களினால் முன்னொருபோதிலுமில்லாதளவில் அறுவடை பெறப்பட்டது. விவசாயிகள் தமது அறுவடைகளை நியாயமான விலைகளில் விற்பனை செய்வதில் இடர்பாடுகளை எதிர்நோக்கும் போது திணைக்களமானது நெல் சந்தைப்படுத்தல் சபையினூடாக நெல்லை உத்தரவாத விலையில் கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடு செய்து அவற்றினை பண்டகசாலைகளில் களஞ்சியப்படுத்தியது. திணைக்களமானது அது எதிர்நோக்கிய அனைத்து சவால்களையும் சரியான வழியில் எதிர் கொண்டது.

உணவு திணைக்களத்தின் பண்டகசாலைகளில் மேற்குறித்த பாதுகாப்பு அரிசி இருப்பினை களஞ்சியப்படுத்துவதற்கு 2011 இன் ஆரம்பத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பாதுகாப்பு இருப்பானது நீண்ட காலத்திற்கு சேமித்து வைக்கப்படுவதால் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கு இரசாயனங்களைப் பாவிக்க

வேண்டியிருந்தது. இந்நிலையில், திணைக்களமானது இரசாயனங்களின் பாவனையானது அரிசியின் உயர் தரத்தினை குறைவடையச் செய்வதனை அவதானித்ததுடன் பெருமளவிலான பணம் இதற்கு செலவிடப்பட வேண்டியுமிருந்தது. ஆனால் அரிசியைப் ஒரு வருடத்திற்கு மேல் பாதுகாப்பாக பேணுவதற்குக் பொருத்தமான முறையெதுவும் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்நிலையில், களஞ்சியப்படுத்தல் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டதன் விளைவாக அரிசி களஞ்சியப்படுத்தல் தொடர்பில் நான்கு விஞ்ஞான முறைகளை ஆராய்துள்ளது.

அதற்கிணங்க, உணவு திணைக்களமானது அத்தகைய நான்கு வகையிலான களஞ்சிய மாதிரிகளை நிருமாணிப்பதற்கான கருத்திட்ட பிரேரணையொன்றினைத் தயாரிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டதுடன் அத்தகைய விஞ்ஞான முறைகளை உரிய தரப்பினருக்கு சமர்ப்பிப்பதற்கும் அதன் கட்டங்களை அமுல்படுத்துவதற்கும் தேவையான அங்கீகாரத்தினை பெறுவதற்கும் கவனம் செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும், 2012 இல் உத்தேச கருத்திட்டத்திற்காக போதுமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையினால் இவற்றினை முன்னுரிமை ஏற்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. திணைக்களமானது பொறிமுறை காற்றோட்ட முறைமை மற்றும் இயற்கை காற்றோட்ட முறைமையினை பூர்த்தி செய்ய முடிந்துள்ளதுடன் அவற்றினைக் கட்டுப்படுத்துகின்ற உரிய விஞ்ஞான உபகரணங்களை நிறுவுதல் மற்றும் தொழிற்பாட்டு பிரிவினை நிருமாணித்தல் என்பனவற்றினையும் மேற்கொண்டுள்ளது.

திணைக்களத்திற்கு திறைசேரியிடமிருந்து நிதி ஏற்பாடுகள் எதுவும் வழங்கப்படாமையினால் வருடாந்த மதிப்பீடுகளினால் மேற்கொள்ளப்பட்ட குறித்த சில விடயங்களின் கீழ் முறையான செலவின ஏற்பாடுகளின் மூலம் 1000 மெ.தொ.

அரிசிக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது.திணைக்களமானது, மேற்படி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி உரிய களஞ்சியங்களில் அரிசி களஞ்சியப்படுத்தலை ஆரம்பிப்பதற்கானஏற்பாடுகளை மேற்கொண்டது. கடந்த வருடமானது இத்தகைய நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதில் சவால்களை எதிர்கொண்ட போதிலும், திணைக்களமானது சரியான முறையில் சவால்களை எதிர்கொண்டு அனைத்து இலக்குகளையும் அடைந்திருந்தது.

உணவு திணைக்களமானது அரிசி மற்றும் ஏனைய தானியங்களின் களஞ்சியப்படுத்தலுக்கு அப்பால் பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு ஆகியவற்றினை களஞ்சியப்படுத்துவதற்காக இரண்டு விஞ்ஞான முறையிலான களஞ்சியங்ளை நிருமாணிப்பதற்கான உரிய திட்டமிடல்களை மேற்கொள்வதற்கும் கருத்திட்ட பிரேணையினை சமர்ப்பிப்பதற்கும் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.இதற்கும் மேலாக, திணைக்களமானது, 2013 இல் இன்னொரு விஞ்ஞான முறையிலான களஞ்சியமொன்றினை நிருமாணிப்பதற்குமான நடவடிக்கைளையும் ஏற்கனவே எடுத்துள்ளது. அதற்குத் தேவையான ஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, உணவு திணைக்களத்தின் எதிர்கால திட்டமிடல்கள் ஆகக் குறைந்த செலவில் எதிர்பார்த்த மட்டத்தினை அடைவதற்காக களுசியங்களை மேம்படுத்துதல், பாதுகாப்பு இருப்பு மட்டத்தினை பேணுதல் மற்றும் ஏற்றுமதிக்கான அரிசி மிகையினை இனங்காணல் ஆகிய நடவடிக்கைகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபடுவதேயாகும்..



# (03). நிருவாக கட்டமைப்பு



# (04). நிருவாக கட்டமைப்பும் பதவியினரும்

## ■ நிருவாக கட்டமைப்பு

உணவு ஆணையாளரினால் மேற்கொள்ளப்பட்டுவரும் நிருவாக மற்றும் பேணுதல் நிகழ்ச்சித்திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

2012 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் அனைத்து கணக்குகள் தொடர்பான நடவடிக்கைகளும் கணக்காளரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வெயாங்கொட, நாஹைன்பிட்டி மற்றும் ஒருகொடவத்தை களஞ்சியங்கள் மற்றும் திருகோணமலை உதவி உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவு என்பன அதற்குப் பொறுப்பானவர்களினால் மேற்பார்வை செய்யப்படுவதுடன் நாரஹென்பிட்டு தரக்கட்டுப்பாட்டுப் பிரிவானது தானிய மதிப்பாய்வாளர் விடுவிக்கப்பட்டதன் காரணமாக பொறுப்பதிகாரியினால் மேற்பார்வை செய்யப்பட்டுள்ளது.

சுப்ரா தர முகாமைத்துவ உதவியாளர் ஒருவரினால் பதில் நிருவாக உத்தியோகத்தரின் கடமைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2012 டிசம்பர் 31 இல் 229 மொத்த ஊழியர்களில் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் 1, 11 மற்றும் 111 இனைச் சேர்ந்தவர்களில் அங்கீகரிக்கப்பட்ட 82 பேரும் பல்வேறு வகுதிகளைச் சேர்ந்த 108 திணைக்கள ஊழியர்களில் 71 பேரும் உணவு திணைக்களத்தில் தற்போது சேவையாற்றி வருகின்றனர்.

2012 ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான நிலைமையின்படி, மொத்த ஊழியர்களில் 9% மானோர் குறித்த ஆண்டு காலப்பகுதியில் ஓய்வு பெற்றுள்ளதுடன் இரண்டு சாரதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.



## ■ 2012 ஆம் ஆண்டுக்கான உணவு திணைக்களத்தின் பதவியினர்

| # | பதவிப்பெயர் | அங்கீகரித்த எண்ணிக்கை | 2012.12.31 திகதியிலுள்ளவாறான எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | உணவு ஆணையாளர் | 01 | 01 |
| 02 | பிரதி / உதவி உணவு ஆணையாளர் | 02 | 01 |
| 03 | கணக்காளர் | 02 | 01 |
| 04 | நிருவாக உத்தியோகத்தர் | 01 | 01 (பதில் நியமனம்) |
| 05 | மொழிபெயர்ப்பாளர் | 01 | - |
| 06 | தரக்கட்டுப்பாட்டுஉத்தியோகத்தர் | 01 | - |
| 07 | தானிய அளவையிலாளர் | 01 | – |
| 08 | வேலை பரிசோதகர் | 01 | 01 |
| 09 | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 01 | – |
| 10 | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 82 | 42 |
| 11 | சுரங்க மேடை சேவை | 10 | 08 |
| 12 | சாரதிகள் | 10 | 08 |
| 13 | அலுவலக உதவியாளர் சேவை | 22 | 12 |
| 14 | புகையூட்டும் இயந்திர இயக்குனர்/தொழிலாளி) | 26 | 21 |
| 15 | வாகன உதவியாளர்கள் | 02 | 13 |
| 16 | சுரங்க மேடை தொழிலாளர்கள் | 01 | 01 |
| 17 | காவலாளி | 41 | 27 |
| 18 | களஞ்சிய லிகிதர்கள் | 24 | – |
| | | | |
| மொத்தம் | | **229** | **137** |

- **2012 ஆம் ஆண்டிற்கான திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையும் சேவையாற்றும் ஊழியர்களும்**



## 1. புதிய நியமனங்கள்

| # | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| I. | இலங்கை நிருவாக சேவை | 01 |

## II. புதிய ஆட்சேர்ப்புக்கள்

| # | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| I. | சாரதிகள் சேவை | 02 |

## III. ஓய்வு பெற்றவர்கள்

| # | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| I. | முகாமைத்துவ உதவியாளர் சேவை | 03 |
| II. | சுரங்க மேடை உத்தியோகத்தர் | 01 |
| III. | அலுவலக உதவியாளர் | 01 |
| IV. | புகையூட்டல் இயந்திர இயக்குனர் | 01 |
| V. | காவலாளி | 07 |

## IV. இட மாற்றல்கள்

| # | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| I. | முகாமைத்துவ உதவியாளர் சேவை | 03 |

## V. இடமாற்றலாகி வந்தோர்

| # | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| II. | முகாமைத்துவ உதவியாளர் சேவை | 03 |

## VI. திணைக்கள சேவையிலிருந்து விலகியோர்

(48 (அ) ஓய்வூதியக் குறிப்பு)

| # | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| I. | தானிய அளவையியலாளர் | 01 |

# (05). கணக்காய்வும் ஒழுக்காற்று நடவடிக்கைகளும்

## ▪ கணக்காய்வு

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களமானது உணவுத் திணைக்களத்தில் கணக்காய்வுப் பிரிவொன்றினை தாபித்துள்ளது.முறையான கணக்காய்வு மற்றும் இறுதிக் கணக்குகளை கணக்காய்வு செய்தல் என்பன அதன் பதவியினரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திணைக்களத்தின் உள்ளககணக்காய்வு நடவடிக்கைகள் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றன. கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்படுகின்ற கணக்காய்வு வினாக்களுக்களுக்கான விடைகள் உணவுத் திணைக்களத்திலுள்ள அலுவலகத்தினால் அமைச்சுக்கான பிரதிகளுடன் உரிய தரப்புக்களுக்கு நேரடியாகவே அனுப்பி வைக்கப்படுகின்றன.

அதற்கிணங்க, 2012 ஆம் ஆண்டில் 26 கணக்காய்வு தொடர்பான வினாக்கள் எழுப்பப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 25 வினாக்களுக்கு திணைக்களம் பதிலளித்துள்ளது.

## ▪ ஒழுக்காற்று நடவடிக்கைகள்

2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உணவு திணைக்களத்தினால் களஞ்சிய காப்பாளர் ஒருவர் மீது மட்டும் ஒழுக்காற்று நடவடிக்கையினை எடுத்துள்ளதை இங்கு குறிப்பிட்டு சொல்லலாம்.



# (06). நீதிமன்ற நடவடிக்கைகள்

2012 ஆம்ஆண்டின் இறுதிவரையில் உணவு திணைக்களத்தினால் மாவட்ட நீதவான் நீதிமன்றங்களில் 10 வரையிலான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

| # | வழக்கு வகை | நிலுவையிலுள்ள வழக்குகள் |
|---|---|---|
| I. | மறுக்கப்பட்ட காசோலைகளுக்கான பணத்தினை அளவீடு செய்வதற்காக | 01 |
| II. | களஞ்சிய வாடகை நிலுவையினை அறவீடு செய்வதற்காக | 05 |
| III. | களஞ்சியங்களின் உரித்தினைப் பெறுவதற்கு | 01 |
| IV. | நட்டங்களினை அறவீடு செய்வதற்கு | 03 |
| மொத்தம் | | 10 |

| # | நீதிமன்றம் | சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவை |
|---|---|---|
| I. | திருகோணமலை தானியகம வீடுகளுக்கான நிலுவை வாடகையினை அறவீடு செய்வதற்கும் அவற்றின் உரிமையினை மீளப் பெறுவதற்கும் எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகளின் எண்ணிக்கை (வெளியேறுவதற்கான அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.) | 36 |
| மொத்தம் | | 36 |

| | |
|---|---|
| மொத்தக் கூட்டுத்தொகை | 46 |

மேலும், அரச சொத்துக் கடனை மீளச் செலுத்தாத திணைக்களத்தில் சேவையாற்றிய நான்கு பேருக்கெதிராக சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைந்து 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# (07). திணைக்களத்திற்கு சொந்தமான களஞ்சியங்களும் வீடுகளும்

## ■ திணைக்களத்திற்கு சொந்தமான களஞ்சியங்கள்

25 மாவட்டங்களிலுள்ள உணவு திணைக்களத்திற்கு சொந்தமான களஞ்சியங்களின் எண்ணிக்கை 147 ஆகும். அரச சொத்துக்களை முறையாக முகாமை செய்யும் நோக்கில் அத்தகைய சொத்துக்கள் பின்வரும் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

| # | களஞ்சியம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டவை | 55 |
| 2. | தற்காலிக/வாடகை அடிப்படையில் அரச துறை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட களஞ்சியங்கள் | 43 |
| 3. | தற்போது உணவு திணைக்க்ளத்தின் பொறுப்பிலுள்ள களஞ்சியங்கள் | 30 |
| 4. | மாவட்ட செயலாளர்/பிரதேச செயாலளர் பொறுப்பிலுள்ள களஞ்சியங்கள் | 15 |
| 5. | அரச நிறுவனங்களுக்கு உருத்தளிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள களஞ்சியங்கள் | 3 |
| 6. | தீவிரவாத நடவடிக்கைகளினால் சேதமடைந்த களஞ்சியங்கள் | 1 |
| | மொத்தம் | 147 |

## ■ திணைக்களத்திற்கு சொந்தமான வீடுகள்

உணவுதிணைக்களத்தின் நிருவாகத்தின் கீழ் திருகோணமலை, சீனன்குடா தானியகமவில் 366 வீடுகள் உள்ளன. அந்த வீடுகள் பின்வரும் முறையில் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளன.

| # | 2012.012.31 ஆம் திகதியிலுள்ளவாறு | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பிறிமா சிலோன் கம்பனி | 206 |
| 2. | அரச சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் | 152 |
| 3. | திணைக்களத்தின் பொறுப்பில் | 08 |
| | மொத்தம் | 366 |

### ❖ உணவுத் திணைக்களத்திற்குச் சொந்தமான களஞ்சியங்களின் விபரம்

2012.12.31 ஆம் திகதியிலுள்ளவாறான திணைக்களத்தின் நட்டங்கள் மற்றும் வாடகைக்கு அல்லது வாடகையல்லாமல் வழங்கப்பட்டுள்ள திணைக்களங்கள் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தொடர் இலக்கம் | களஞ்சியத்தின் பெயர் | சதுர அடி அளவு | கொள்ளளவு மெ.தொ | வாடகைக்கு வழங்கப்பட்ட நிறுவனம் | மதிப்பிடப்பட்ட மாத வாடகைரூபா (புதிய) |
|---|---|---|---|---|---|
| **கொழும்பு மாவட்டம் - ஒருகொடவத்தை** | | | | | |
| 01 | ஒருகொடவத்தை - 01 | 24624 | 6000 | இலங்கைச் சுங்கம் | 365,000/- |
| 02 | ஒருகொடவத்தை - 02 | 24624 | 6000 | புனர்வாழ்வு அமைச்சு | தற்காலிக அடிப்படையில் வாடகையின்றி வழங்கப்பட்டுள்ளது. |
| 03 | ஒருகொடவத்தை - 03 | 20304 | 5000 | கல்வி நூல் வெளியீட்டு திணைக்களம் | 365,000/- |
| 04 | ஒருகொடவத்தை - 04 | 19008 | 5000 | புனர்வாழ்வு அமைச்சு | தற்காலிக அடிப்படையில் வாடகையின்றி வழங்கப்பட்டுள்ளது. |
| 05 | ஒருகொடவத்தை - 05 | 19008 | 4500 | ஐகோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் | 290,000/- |
| 06 | ஒருகொடவத்தை - 06 | 20304 | 5000 | உயர் கல்வி அமைச்சு | 310,000/- |
| 07 | ஒருகொடவத்தை - 07 | 20304 | 5000 | இடர் நிவாரண திணைக்களம் | தற்காலிக அடிப்படையில் வாடகையின்றி வழங்கப்பட்டுள்ளது. |
| 08 | ஒருகொடவத்தை - 08 | 16560 | 4000 | உயர்கல்வி அமைச்சு | 265,000/- |
| 09 | ஒருகொடவத்தை - 09 | 16560 | 4000 | புனர்வாழ்வு அமைச்சு | தற்காலிக அடிப்படையில் வாடகையின்றி வழங்கப்பட்டுள்ளது. |
| 10 | ஒருகொடவத்தை - 12 | 18183 | 4000 | இலங்கைச் சுங்கம் | 257,500/- |
| 11 | ஒருகொடவத்தை - 10 | 13436 | - | ராங் கொன்ரைனர்ஸ் (தனியார்) லிமிட்டட் | 2,465,000/- |
| 12 | ஒருகொடவத்தை - 14 | 11448 | - | | |
| 13 | ஒருகொடவத்தை - 15 | 18206 | - | | |
| 14 | ஒருகொடவத்தை - 16 | 19838 | - | | |
| 15 | அலுவலக கட்டிடம் | - | - | | |
| | **மொத்தம்** | **262407** | **48500** | | **4,317,500/-** |
| **கொழும்பு மாவட்டம் - *நாரஹேன்பிட்டி*** | | | | | |
| 16 | நாரஹேன்பிட்டி - 01 | 10092 | 2110 | உணவு திணைக்களம் | - |
| 17 | நாரஹேன்பிட்டி - 02 | 10092 | 2150 | | |
| 18 | நாரஹேன்பிட்டி - 03 | 3583 | 700 | மொடர்ண் டிஸ்ரிபியூட்டர்ஸ் | 160,000/- |
| 19 | நாரஹேன்பிட்டி - 04 | 10135 | 2110 | உணவு திணைக்களம் | - |
| 20 | நாரஹேன்பிட்டி - 05 | 10135 | 2150 | | |
| 21 | நாரஹேன்பிட்டி - 06 | 10135 | 2150 | | |
| 22 | நாரஹேன்பிட்டி - 07 | 9740 | - | பொருளாதார நிலையம் | - |
| 23 | நாரஹேன்பிட்டி - 08 | 28080 | 5700 | | |
| 24 | நாரஹேன்பிட்டி - 09 ஏ | 10000 | 4150 | தெரண நிறுவனம் | 475,000/- |
| 25 | நாரஹேன்பிட்டி - 09 பி | 10000 | 2600 | உணவு திணைக்களம் | - |
| 26 | நாரஹேன்பிட்டி - 10 | 15000 | 2600 | | |
| 27 | நாரஹேன்பிட்டி- 11 | 23850 | 5000 | பொருளாதார நிலையம் | - |
| 28 | நாரஹேன்பிட்டி - 12 | 12992 | 2700 | உணவு திணைக்களம் | - |
| | **එකතුව** | **163834** | **34120** | | **1,150,000/-** |

| தொடர் இலக்கம் | களஞ்சியத்தின் பெயர் | சதுர அடி அளவு | கொள்ளளவு மெ.தொ | வாடகைக்கு வழங்கப்பட்ட நிறுவனம் | மதிப்பிடப்பட்ட மாத வாடகைரூபா (புதிய) |
|---|---|---|---|---|---|
| கொழும்பு மாவட்டம் *பாண்ஸ் பிளேஸ்* | | | | | |
| 29 | பாண்ஸ் பிளெஸ் பதிவேட்டு அறை | - | 5000 | உணவு திணைக்களம் | - |
| 30 | பாண்ஸ் பிளெஸ் அலுவலகம் | - | 2300 | மஹபொல நம்பிக்கை நிதியம் | 85,000/- |
| 31 | பாண்ஸ் பிளெஸ் அலுவலகம் | - | 19362 | சமுர்த்தி ஆணையாளர் திணைக்களம் | - |
| 32 | அவ்வாறே | - | - | | - |
| 33 | அவ்வாறே | | - | | - |
| 34 | அவ்வாறே | - | - | | - |
| 35 | அவ்வாறே | - | - | | - |
| | **மொத்தம்** | **-** | **26662** | | **85,000/-** |
| கொழும்பு மாவட்டம்- *இரத்மலானை* | | | | | |
| 36 | இரத்மலானை - 01 | 50350 | 8530 | பொருளாதார நிலையம் | - |
| 37 | இரத்மலானை - 03 | 41200 | 7520 | செஞ்சிலுவை சங்கம் | தற்காலிக அடிப்படையில் வாடகையின்றி வழங்கப்பட்டுள்ளது. |
| 38 | இரத்மலானை - 04 | 19032 | 2580 | பொருளாதார நிலையம் | |
| 39 | இரத்மலானை - 05 | 21008 | 2900 | தொழில் திணைக்களம் | அமைச்சரவையின் தீர்மானத்தின்படி 33 வருடங்களுக்கு வாடகையின்றி வழங்கப்பட்டுள்ளது. |
| | **மொத்தம்** | **131590** | **21530** | | |
| **கொழும்பு மாவட்டம் - வெள்ளவத்தை** | | | | | |
| 40 | வெள்ளவத்தை - 01 | 10266 | 2000 | சுகாதார திணைக்களம் | - |
| 41 | வெள்ளவத்தை - 02 | 10915 | 2000 | | - |
| 42 | வெள்ளவத்தை - 03 | 11100 | 2000 | | - |
| 43 | வெள்ளவத்தை - 04 | 11100 | 2000 | இலங்கை கடற்படை | - |
| | | **43381** | **8000** | | - |
| கொழும்பு மாவட்டம் | | | | | |
| 44 | ஹுணுப்பிட்டி அலுவலக அறை | 755 | - | திருமதி.சுனிதா குணசிங்க | 2,800/- |
| | **மொத்தம்** | **755** | **-** | | **2,800/-** |

